[1974 சனவரி 19

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு வாரியத்தை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். மாவட்டத் தலைநகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடிசைமாற்றுப் பணிகளைச் செய்வதற்கு ஓரளவு பணம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டியில் வீட்டு வசதி வாரியப் பிரிவு.

*27 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின் கிளை ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

திரு. நா. வெ. குருசாமி: ஆண்டிப்பட்டியில் சுமார் 15,000 மக்கள் வசிக்கிறார்கள். அங்கு வீட்டு வசதி வாரியத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்தி அங்குள்ள வீடு இல்லாத மக்களுக்கு மலிவான வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆண்டிப்பட்டி என்பது ஒரு சின்ன சிற்றூர். அதற்கு வீட்டு வசதி வாரியத்தின் வேலைகள் எவ்வளவு தேவைப்படும் என்று எனக்கு தெரியவில்லை. அவர்களது கேள்வியில், வீட்டு வசதி வாரியத்தின் அலுவலகம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். வீடுகள் கொஞ்சம் அளவு கட்டவேண்டுமென்றால் மதுரையில் உள்ள வாரிய அதிகாரிகளை அணுகினால் அல்லது மற்ற வீட்டு வசதி வாரியம் அதிகாரிகளை அணுகினால் வீடுகள் கட்டித்தர வீட்டு வசதி வாரியம் தயாராயிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. In the English list of questions, the question No. 28 is not in proper form. Something is omitted. "Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the appointment . . . . ." 'whether' has been omitted. What is the meaning of this question?

'வெதர்' என்பது விட்டுப்போயிருக்கிறது. க்வஸ்டினின் பாரம் சரியாகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்திக்கொள்ளலாம்.

1974 சனவரி 19]

கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள்.

*28 வினா—**திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறநிலையத்துறையை சேர்ந்த எல்லா கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க அரசு ஆலோசித்து வருகின்றதா?

மாண்புமிகு திரு. மு. கண்ப்பணன்: ஆம்.

அறங்காவலர்கள் பதவிகள்

*29 வினா—**திரு. வை. பாலசுந்தரம்**: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகக் கோயில்களில் இதுவரையில் தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 1969 ஆம் ஆண்டு முதல், 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி வரையில் 767 தாழ்த்தப்பட்டோர் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. வை. பாலசுந்தரம்: இதில் எத்தனை பேர்கள் நிர்வாக அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நிர்வாக அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதில்லை. நியமிக்கப்பட்ட அறங்காவலர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள்தான் நிர்வாக அறங்காவலர்களாக வருகிறார்கள். அதில் எவ்வளவு பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரக்குறிப்பு என்னிடமில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: நந்தனாரைக் கவர்ந்த சிதம்பரம் கோயிலில் ஹரிஜன அறங்காவலர் நியமிக்கப்பட்டிருக்கிறாரா என்பதை அரசாங்கம் தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி சிதம்பரம் கோவிலின் அறங்காவலர்களை அவர்கள் ஒரு சமுதாயத்திற்குள்ளே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலமாகவே

நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே அங்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை நியமிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லை.

சென்னை வடபழனி கோயில்

*30 வின—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, வடபழனி கோயிலை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : சென்னையில் உள்ள வடபழனி கோவிலுக்கு வருகிற பக்தர்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறார்கள். எனவே திருத்தணி போன்று இங்கும் தங்குவிடுதிகள் கட்டி வருகிற பக்தர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சென்னை நகரில் இருக்கிற வடபழனி ஆண்டவர் கோவிலுக்குத் தங்குவிடுதிகள் கட்டுவதற்குப் போதுமான இடவசதி அங்கு இல்லை. ஆனால் கோவிலைப் பொறுத்த அளவில் விரிவாகக் கட்டுவதற்கும், சுற்றுப் பிரகார மண்டபங்கள் அமைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவில் வேலைகள் இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it a fact that a sum of Re. 1 is charged for each person at the Vadapalani Temple ? All are equal in front of God. Is the Government aware of this fact and whether any action has been taken to stop the collection of Re. 1 from each person ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]